# சிம்சோன்

சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

படங்களுடன்

2

# தேவனுக்கு தன்னை முற்றிலும் அர்ப்பணித்துள்ள மனிதன் சர்வ வல்லமையுள்ளவனாக இருக்கிறான்.



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: 60-1204E – பத்மு தரிசனம்

251 ஆமென். ஏதேன் தோட்டத்திலிருந்தது போல, மனிதன் தேவனுடன் இணைக்கப்படும்படி, மனுகுலத்திற்கு இருந்த தடைக் கல்லையெல்லாம் அவர் தகர்த்தெறிந்தார்.

இப்பொழுது மனிதனானவன்...***நான் இப்பொழுது சொல்லப் போவாதைக் குறித்து சொல்ல முடியாமல் தடைப்பட்டேன். ஆயினும் நான் அதைப் பற்றி சொல்லிவிடப் போகிறேன்.***

என்னவெனில்; மனிதன் சர்வ வல்லமை படைத்தவன். நீங்கள் அதை விசுவாசிக்கவில்லை. ஆயினும், மனிதன் அவ்வாறு தான் இருக்கிறான்.

## தேவனுக்கு தன்னை முற்றிலும் அர்ப்பணித்துள்ள மனிதன் சர்வ வல்லமையுள்ளவனாக இருக்கிறான்.

மாற்கு சுவிசேஷம் 11:22-ல் இயேசு, "நீங்கள் எதையாகிலும் கூறி, அதை உங்கள் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவசித்தால், அது சொன்னபடியே ஆகும், நீங்கள் கேட்டுக் கொண்டதைப் பெற்றுக் கொள்ள முடியும்" என்று கூறவில்லையா?

252 **சர்வ வல்லமையுள்ள இரு நபர்கள் சந்தித்தால் என்ன நடக்கிறது?**

**சர்வ வல்லமையினாலே தேவனும் மனிதனும் ஒன்று சேரும் போது, ஏதோ ஒன்று அசைவை உண்டாக்கத்தான் வேண்டும்.**

சிருஷ்டிக்கும் வல்லமையுள்ள தேவனுடைய சர்வ வல்லமையைக்

கொண்டு நீங்கள் ஒன்றை உரைத்தால், அவர் அதை வாக்குரைத்திரைத்திருக்கிறார் என்றும், அவர் அதை தம்முடைய வார்த்தையில் உரைத்துள்ளார் என்றும் அறிந்திருக்கும்போது, அப்பொழுது அது வெளியே புறப்பட்டுச் செல்லுகிற ஒரு வல்லமையை சிருஷ்டிக்கிறது.

அது உரைக்கப்பட்டவைகளை நிறைவேறும்படி செய்கிறது.

இல்லாதவைகளை இருக்கிறவைகளாக இருக்கும்படி செய்கிறது அவ்வல்லமை, ஏனெனில் இரு சர்வ வல்லமைகளும் சந்தித்திருக்கின்றன. அங்கே அவர் நிற்கிறார்! ஓ! அவர் அற்புதமானவராக இல்லையா?

**60-1204E – பத்மு தரிசனம்**

Rev. William Marrion Branham

அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தனி
மனிதனின் ஆத்துமாவில்
கிறிஸ்து வாழ்கிறார்.
கிறிஸ்து உதடுகளின்
மூலமாகப் பேசி, மனதின்
மூலமாக சிந்தித்து
கண்களின் மூலமாகப்
பார்த்து, சுபாவத்தின்
மூலமாக கிரியை
செய்கிறார். அல்லேலூயா

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: 56-01-01 ஏன் ஜனங்கள் அலைகழிக்கப்படுகிறார்கள்? (உள்ளான இளைப்பாறுதல்)

117. இந்த உள் பிரகாரத்தைக் கவனியுங்கள். உள் திரைக்குள்ளே வாழ்கின்ற ஜனங்கள் எப்பொழுதும் போஷிக்கப்பட்டு, ஆகாரத்தை உண்கின்றவர்களாகவும் சந்தோஷமானவர்களாகவும் காணப்படுகின்றனர். "நான் என் நியாயப் பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி நான் அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்று எரேமியா தீர்க்கதரிசி வேறொரு காலத்தைப் பற்றி பேசினான். அக்காலங்களில் தேவனுடைய நியாயப் பிரமாணம் கற்பலகைகளில்

எழுதப்பட்டு, உடன்படிக்கைப் பெட்டி (The ark) இருதயத்தைக் குறிக்கிறதாயிருக்கின்றது. ஆகவே தேவன் தம்முடைய புதிய உடன்படிக்கையை அவர்களுடைய இருதயங்களில் எழுதுவதாகக் கூறினார்.

118. இருதயமானது தேவனின் வீடாயிருக்கின்றது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் தம்முடைய மகிமையில் உடன்படிக்கைப் பெட்டியினுள் இருந்தார். இந்த உடன்படிக்கைப் பெட்டி மனிதனுடைய இருதயம் தான் என்பது வெளிப்பாடு. தேவன் நம்முடைய தலையில் வாசம் செய்கிறதில்லை. இருதயத்தில் தான் வாசம் செய்கிறார். வேத சாஸ்திரத்தினாலோ, மனோபாவனையான புத்தியினாலோ தேவன் அறியப்படுகிறதில்லை. மாறாக தேவன் பழமையான விதத்தில் மனித இருதயத்திலிருக்கிறதான மறுபடியும் பிறந்த பரிசுத்தமாக்கப்பட்ட

அனுபவத்தினால் மட்டுமே அறியப்படுகிறார்.

119. இருந்தாலும், ஜனங்கள் தங்களுடைய மனோபாவனையான புத்தியினால் (Mental Conception) தேவனை நேசித்து, நல்ல ஜீவியம்செய்யக்கூடும். ஆனால் தேவனை அறிகிற அறிவின் உண்மையான மறைவிடம் இருதயத்தில் தான் இருக்கிறது. கிறிஸ்து என்னும் பரிசுத்த ஆவியானவர் உன் இருதயத்திற்குள் வரும்போது நீ கிறிஸ்துவில் மறைக்கப்படுகிறாய். அவர் உன்னுடைய சுபாவத்தோடு இருந்து, உனக்குள் தம்முடைய சொந்த ஜீவனால் வாழ்ந்து, தம்முடைய சொந்த சித்தத்தையே உன் மூலம் செய்கின்றார். அல்லேலூயா.

120. அது கடினமான காரியம் என்று நான் அறிவேன். ஆனால் அது தான் சத்தியம். முற்றிலுமாய் உன்னை நீ ஒப்புக்

கொடுத்த பின்பு, கிறிஸ்து எத்தகைய வார்த்தையைப் பேசுவாரோ அதையே உன் மூலமாய் பேசுவார். அவர் எதை நினைப்பாரோ அதையே உன் மூலமாய் நினைப்பார். அவர் என்ன கிரியைகளைச் செய்வாரோ அதையே உன் மூலமாகச் செய்வார். நீ முற்றிலுமாக ஒப்புக்கொடுக்கப்பட்டு இளைப்பாறிக் கொண்டிருக்கிறாய்.

121. தன்னை முழுவதுமாக அர்ப்பணித்த ஓர் கிறிஸ்தவனின் சாட்சி எவ்வளவு அழகாயிருக்கின்றது.

122. கிறிஸ்து எனக்கு ஜீவன். சாவு எனக்கு ஆதாயம். "இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (பிலிப்: 1:21, கலா: 2:20) என்று பவுல் கூறினான்.

123. *அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தனி மனிதனின் ஆத்துமாவில் கிறிஸ்து வாழ்கிறார். கிறிஸ்து உதடுகளின்*

***மூலமாகப் பேசி, மனதின் மூலமாக சிந்தித்து கண்களின் மூலமாகப் பார்த்து, சுபாவத்தின் மூலமாக கிரியை செய்கிறார். அல்லேலூயா***

124. உலகத்திற்குரியக் காரியங்களெல்லாம் ஒழிந்த பின்பு, அங்கு எப்பொழுதும் இனிமையும், சமாதானமும் தவிர வேறு என்ன இருக்கக்கூடும்? கிறிஸ்துவே ஆதிக்கம் செலுத்துகிறார். ஆமென், இதை நீங்கள் காண்கிறீர்களா? கிறிஸ்து உனக்குள் இருப்பதே காரியம்.

125. "நல்லது சகோ. பிரன்ஹாமே, அது சத்தியம் என்று நான் விசுவாசிக்கிறேன்" என்று நீ கூறுவாய். அவ்விதம் நீ உன் மனோபாவனையில் விசுவாசிப்பது சரிதான். ஆனால் அது உன் இருதயத்திற்குள் வரவேண்டும். அவ்விதம் வருமானால் உன் முழுதன்மையும் கிறிஸ்துவாயிருக்கும். உன்னுடைய சுபாவம் விருப்பங்கள், பசி, தாகம்,

உன்னுடைய எல்லாம் கிறிஸ்துவாயிருக்கும். ஒப்புக் கொடுத்து இளைப்பாறிக் கொண்டிருத்தல் - எல்லாம் பரிபூரணம்!

126. எந்த சத்தத்தினால் (Voice) ஒரு பாவியினிடத்தில் பேச வேண்டுமோ, அந்த சத்தத்தில் அவர் அவனோடு பேசுவார். எந்த சத்தத்தினால் ஒரு விபச்சாரியினிடத்தில் அவர் பேச வேண்டுமோ, அந்த சத்தத்தில் அவளோடு அவர் பேசுவார். எந்த சரியான சித்தனையினால் அவர் சிந்திப்பாரோ, அந்த சிந்தனையை உன் மூலமாக அவர் சிந்தித்து அதை உன் இருதயத்தில் பேசுவார். இந்த உலகத்தில் அவர் இருந்த போது செய்த விதமாகவே உன்னிலும் செய்வார். இனி நீ உன்னுடையவனாயிருப்பதில்லை.
ஏனெனில் நீ ஒப்புக் கொடுக்கப்பட்டு விட்டாய்.



**ஸ்திரீயானவள் தன் தலை முடியை வெட்டிக்கொண்டால், அவள் எவ்வளவு ஆவியில் நடனமாடினாலும், பாடல் குழுவில் இருந்து பாடினாலும், அந்நிய பாஷைகளில் பேசி மேலும் கீழும் குதித்தாலும், எல்லாவிதமான உதவிச் சங்கங்களில் இருந்தாலும், அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை! அவள் மரித்தவள்தான்.**



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: 65-08-01M இப்பொல்லாத காலத்தின் தேவன்

146. "முடியை வெட்டிக்கொள்ளுவதால் என்ன தவறு இருக்கிறது" என்று அவள் கூறுகிறாள்.

சகோதரனே, இங்கு ஒரு நிமிஷம் நிதானிப்போம். இப்பொழுதே நான் பேசிக் கொண்டிருக்கையில் நான் சொன்ன இந்த காரியத்தைப் பற்றி, யாரோ மனதில் இடறுண்டு கோபப்படுவதாக உணருகிறேன். தொலைபேசி வாயிலாக இவ்வார்தனையில் பங்குகொள்ளும் ஏதாவது ஒரு நபராக அது இருக்கலாம்.

கவனியுங்கள், ஒரு ஸ்திரீக்கு நீண்ட தலைமுடி இருப்பது, அவளுக்கு நசரேயப் பொருத்தனையாகும்.



சிம்சோனுக்கு நீண்ட முடியிருந்தது. அவனுக்கு நசரேயப் பொருத்தனையா யிருந்தது.

ஒரு ஸ்திரீ தன் தலைமுடியை வெட்டிக் கொள்வாளென்றால், அவள்

முழுவதுமாக தன்னுடைய நசரேயப் பொருத்தனையை மறுதலிக்கிறாள்.



அவள் கிறிஸ்துவுக்கு மணவாட்டி யாயிருப்பதைக் காண்பிக்கும் நசரேய விரதத்தை மறுதலிக்கிறாள்.

ஏனெனில் அந்த ஒரு காரியம் எல்லாவற்றையும் அடியோடு கெடுத்துவிடுகிறது. சரியாக அப்படித்தான்.

நசரேயன் என்னப்பட்டவன், ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக தன்னைப் பிரதிஷ்டை செய்துக் கொண்டவன் ஆவான்.

சிம்சோன் ஒரு காலத்திற்காக, ஒரு நோக்கத்திற்காக தன்னைப் பிரதிஷ்டை செய்து கொண்டிருந்தான். எனவேதான் அவன் நீண்ட முடியை உடையவனாய் இருந்தான்.



147. தேவனுடைய பிள்ளையாயிருக்கிற ஒரு ஸ்திரீயானவள், தான் தேவனுடைய ஒவ்வொரு வார்த்தைக்குள்ளும், பிரதிஷ்டை செய்து கொண்டவள் என்பதைக் காண்பிக்கும்படி, தனது முடியை நீளமாக வளர விடுகிறாள்.

ஸ்திரீயானவள் தன் தலை முடியை வெட்டிக்கொண்டால், அவள் எவ்வளவு ஆவியில் நடனமாடினாலும், பாடல் குழுவில் இருந்து பாடினாலும், அந்நிய பாஷைகளில் பேசி மேலும் கீழும் குதித்தாலும், எல்லாவிதமான உதவிச் சங்கங்களில் இருந்தாலும், அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை! அவள் மரித்தவள்தான்.

1 கொரிந்தியர் 14ம் அதிகாரத்தின்படி, அது 'கர்த்தர் உரைப்பது என்னவென்றால்' என்னும் தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது. பார்த்தீர்களா?



அவள் தன்னுடைய நசரேய விரதத்தை மறுதலித்து தன்னை இந்த நவீன யுகத்தின் தேவனுக்கு விற்றுப்போட்டுவிட்டாள்.

அவள் அதைச் செய்துவிட்டாள். அப்பொழுது, இக்காரியத்தைச் செய்துள்ள

ஸ்திரீயே, பெண்மணியே, நீ வெட்கத்திற்குரியவள்.



ஆனால் கர்த்தருடைய
ஆவியானவர் அவன் மேல்
இறங்கினபோது, அந்த சிங்கம்
அவனை நோக்கி ஓடி கெர்ச்சித்த
போது, அதை துண்டு துண்டாக
கிழித்துப் போட்டான். அது
சிம்சோன் அல்ல. அது
கர்த்தருடைய ஆவி.



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: 64-08-23 M கேள்விகளும் பதில்களும் COD #20

183. இப்பொழுது, இங்குள்ளது போல, என்னை உந்துவது எது? என் கையிலுள்ள பலம் எது? அது நிச்சயமாக என் தசைகள் அல்ல, அது என் ஆவி.

நிச்சயமாக, அந்த ஆவியை எடுத்துப் போடுங்கள், அப்பொழுது தசை என்ன செய்ய முடியும்? அது செத்ததாய் இருக்கும். பார்? அது அழுகிப்போகும், ஆனால் அது .... பார் , ஆவிதான் பலத்தை அளிக்கிறது.

184. சிம்சோனைப் பாருங்கள். இந்த இரண்டு கம்பங்களுக்கும் இடையே இருக்கக் கூடிய அவ்வளவு பெரிய கதவுகளை உங்களில் அநேகர் கண்டிருப்பீர்கள்.



சகோ. ஜாக்சன், அவ்வளவு திடகாத்திரமுள்ள மனிதன், ஒரு சிங்கத்தை சுக்குநூறாகக் கிழிக்கக் கூடிய பலமுடையவன்.

தானியக் களஞ்சியத்தின் கதவைப் போல் அவ்வளவு அகலமுள்ள தோள்களைக் கொண்டிருந்த ஒரு மனிதனின் மேல் சிங்கம் குதித்தது. அவன் அதை பீறிப் போட்டான். அது ஒன்றும் அதிசயமல்ல.



ஆனால் அதிசயம் என்னவென்றால் அவன் சுருண்ட தலைமயிர் கொண்ட, பெண்மைத்தனம் கொண்ட அம்மாவின் மகனாயிருந்தான்.

பெண்ணின் மயிர் சுருள்கள் போல் ஏழு சுருள்கள் அவனுக்குப் பின்னால் தொங்கிக் கொண்டிருந்தன.

ஆனால் கவனித்தீர்களா, கர்த்தருடைய ஆவியானவர் அவன் மேல் இறங்கும் வரைக்கும், அவனால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

ஆனால் கர்த்தருடைய ஆவியானவர் அவன் மேல் இறங்கினபோது, அந்த சிங்கம் அவனை நோக்கி ஓடி கெர்ச்சித்த

போது, அதை துண்டு துண்டாக கிழித்துப் போட்டான். அது சிம்சோன் அல்ல. அது கர்த்தருடைய ஆவி.



185. அவன் எவ்விதம் அந்த வனாந்தரத்தில் உலர்ந்து வெளுத்துக் கிடந்த கழுதையின் தாடையெலும்பை எடுத்து...

அந்த பெலிஸ்தியரின் தலைச்சீராக்கள் ஒரு அங்குலம் கனம் பித்தளையினால் செய்யப்பட்டிருந்தன.

அந்த தாடையெலும்பை நீங்கள் எடுத்து அந்த தலைச்சீராக்களின் ஒன்றின் மேல் அடித்தால், அது ஆயிரம் துண்டுகளாக நொறுங்கி விடும். அது உங்களுக்கு தெரியும்.

அவர்கள் அந்த தாடையெலும்பைக் கொண்டு அடிப்பார்களானால்... ஆனால் அங்கே பாருங்கள், அவன் அந்த தாடையெலும்பைத் தன் கையில் பிடித்து அங்கு நின்று கொண்டு ஆயிரம் பெலிஸ்தியரை மடங்கடித்தான்; மற்றவர்கள் மலைக்கு ஓடிப் போய் விட்டனர்.

அவன், "வாருங்கள், உங்களுக்கும் இந்த கதி வேண்டுமா?" என்று கேட்டான்.

அப்பொழுதும் அவன் அந்த தாடையெலும்பை கையில் பிடித்துக் கொண்டிருந்தான்.

அது என்ன? கர்த்தருடைய ஆவி அவன் மேல் இறங்கினது. பாருங்கள்?



அவன் அழிப்பதற்காக எழுப்பப்பட்ட அதே தேசம் அவனைச் சிறைப்படுத்தியது, இதோ அந்த திடகாத்திரமுள்ள மனிதன், எந்த தேசத்தை அழிக்க வேண்டுமென்று அவன் தேவனால் எழுப்பப்பட்டானோ, அதே தேசத்தால் சிறை பிடிக்கப்பட்டு அங்கு நின்று கொண்டிருக்கிறான்.



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: 63-01-20E இன்னும் ஒரு விசை கர்த்தாவே

33. சிம்சோன் தனக்கிருந்த மகத்தான நாட்களை நினைவு கூர்ந்தான். சபையும் இன்றிரவு, ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு தெய்வீக சுகமளித்தலின் எழுப்புதல் ஒன்றுண்டாகி வெற்றி கொண்டதை நினைத்துப் பார்க்கிறது. அவனும் கூட... தேவனும், தவறிழைத்த அவருடைய ஜனங்களும். அது மிகவும் கவலைக்கிடமான ஒரு செயல், சிம்சோன் தேவனுக்கு தவறிழைத்ததை அங்கு நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் தோல்வியடைந்தது தேவனுடைய தவறல்ல, அது அவனுடைய தவறே. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க எழுப்பப்பட்ட தேவனுடைய ஜனங்கள்;

அவன் நடத்தை கெட்ட இந்த ஸ்திரீயிடம் சல்லாபம் செய்த காரணத்தால், தேவன் அவனுக்களித்திருந்த பலம் அனைத்தையும் இழந்து போனான்.



சபையும் அதே நிலையில் உள்ளது! சபை ஒரு கலங்கரை விளக்கமாய் இருக்க வேண்டுமென்று கருதி தேவன் அதை எழுப்பி, அவருடைய வல்லமையை

அதன் மூலம் பிரயோகித்து, வியாதியஸ்தர்களை சுகப்படுத்தவும், மரித்தோரை எழுப்பவும், பிசாசுகளைத் துரத்தவும், ஜனங்கள் பரிசுத்தமாக வாழ்ந்து முழு சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வல்லமையை வெளிப்படுத்த வேண்டுமெனும் சித்தம் கொண்டார். ஆனால் நாமோ ஊர்ந்து சென்று, தடைகளை கீழே இறக்கி, இவைகளைத் தடை செய்து விட்டோம்.



34. நாம் தவறான உதாரணத்தை எடுத்துக் கொண்டோம். ஸ்திரீகள் போதகரின் மனைவி நடப்பது போல் நடந்து கொள்கின்றனர். அவர் அவளைத் தன் விருப்பத்திற்கு விட்டுக்கொடுத்து, அவள் தலைமயிரைக் கத்தரிக்கவும், பாலுணர்ச்சியைத் தூண்டும் ஆடைகளை அணியவும் அனுமதித்தார், அவர் கடிந்து கொள்ளவேயில்லை. மற்ற ஸ்திரீகள் அவளைக் கண்டு, "சகோதரி இன்னார், அப்படி செய்யும் போது, நானும் செய்யலாம்" என்கின்றனர். அதை உங்கள் உதாரணமாக்கிக் கொள்ளாதீர்கள். பாருங்கள்? நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் உங்களுக்குக் கட்டளையிட்டுள்ளார். அதில் நிலைத்திருங்கள்.

போதகராகிய நீங்கள் அப்படி செய்யும் போது, நீங்கள் தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் தவறிழைக்கிறீர்கள்.


Archibald Thorburn 1905

நீங்கள் தேவனுடைய ஜனங்களுக்கு தவறிழைக்கும் போது, நீங்கள் தேவனுக்கு தவறிழைத்தவர்களாகின்றீர்கள்.

தேவன் உங்களை ஜாமக்காரனாக அங்கு வைத்திருக்கிறார். பாவம் உள்ளே நுழைவதை நீங்கள் காணும்போது, அதை தடுத்து நிறுத்துவதற்கு பதிலாக, அவர்கள் அதனால் வசீகரிக்கப்படுகின்றனர். ''எல்லா போதகர்களும் ஒன்று கூடும்போது, நாங்கள் ஒன்றைச் செய்யப் போகின்றோம். அதாவது நாங்கள் வோட்டு போட்டு, தெய்வீக சுகமளித்தல் என்னும் குறிப்பிட்ட உபதேசத்தை சபையிலிருந்து அகற்றப் போகின்றோம். அது எங்களுக்குப் பிடிக்கவில்லை'', என்கின்றீர்கள். பிறகு நீங்கள் அதற்கு விரோதமாக வோட்டு போடுகின்றீர்கள். ஓ, அப்படித்தான் அது நடந்தது.



35. மெதோடிஸ்டுகளாகிய நீங்கள் முன்பு உங்கள் சபைகளில் தெய்வீக சுகமளித்தலைக் கொண்டிருந்தீர்கள். பிரஸ்பிடேரியன்களே, லூத்தரன்களே, நீண்ட காலம் முன்பு நீங்கள் அதைப் பெற்றிருந்தீர்கள். நீங்கள் கூச்சலிட்டு மகிழ்ச்சி கொள்வது வழக்கம். அதற்கு என்ன நேர்ந்தது? நீங்கள் ஆயிரத்து எண்ணூறு ரிக்கிகளைக் கொண்டிருக்கிறீர்கள். அவர்கள் அதை பகட்டுக்கு கொண்டு சென்று விட்டனர். அதன் விளைவாக தெய்வீக சுகமளித்தல் என்பது உங்களை விட்டு போய்விட்டது.

பெந்தெகொஸ்தேயினராகிய நீங்களும் அதையே செய்துள்ளீர்கள்! அது உண்மை! இப்பொழுது நீங்கள் ஸ்தாபனங்கள் உண்டாக்கிக் கொண்டு, அவர்களைப் போலவே தோல்வியடைந்தவர்களாய் நின்று கொண்டிருக்கிறீர்கள். “எங்கள் குழு இதை விசுவாசிக்கின்றது. நீங்கள் எங்களைச்

சேராவிட்டால் நரகத்துக்கு செல்வீர்கள்'' என்கின்றீர்கள்.



நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள், தர்க்கம் செய்து கொண்டிருக்கிறீர்களா? அதனால் உங்களுக்கு எந்த உபயோகமும் இல்லை. தேவன் உங்களுக்கு ஒரு ஆதரவையும் காட்டுவதில்லை, ஏனெனில் நீங்கள் மற்றவர்களைப் போலவே தோல்வியடைந்த நிலையில் இருக்கிறீர்கள். அவர்கள் சென்ற பாதையிலே நீங்களும் சென்றீர்கள். நிச்சயமாக!

36. அவன் அழிப்பதற்காக எழுப்பப்பட்ட அதே தேசம் அவனைச் சிறைப்படுத்தியது, இதோ அந்த திடகாத்திரமுள்ள மனிதன், எந்த தேசத்தை அழிக்க வேண்டுமென்று அவன் தேவனால் எழுப்பப்பட்டானோ, அதே தேசத்தால் சிறை பிடிக்கப்பட்டு அங்கு நின்று கொண்டிருக்கிறான்.




உங்களைப் புண்படுத்த நான் விரும்பவில்லை, ஆனால் இது உங்களுக்கு உதவி செய்யுமென நம்புகிறேன். இதோ தேவனால் எழுப்பப்பட்ட பெந்தெகொஸ்தே சபை ஸ்தாபனத்திலிருந்து வெளியே வந்தது. ஆனால், இப்பொழுது அது அவர்களை எங்கே கொண்டு சென்றுள்ளது? இப்பொழுது அதே வர்க்கத்துக்கு நீங்கள் சிறைவாசிகளாகி விட்டீர்கள். அது

உண்மையென்று உங்களுக்குத் தெரியும்! பிறகு யாராகிலும் ஒருவர் அதற்கு விரோதமாக ஒன்றைக் கூறிவிட்டால், அவர்களை வெளியே எறிந்து விடுகிறீர்கள். அது ஏறக்குறைய “குருடர் குருடருக்கு வழிகாட்டுவதாய்” உள்ளது.



37. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பெந்தெகொஸ்தே சபையானது ஸ்தாபனம் உண்டாக்கிக் கொண்ட எதையுமே கடிந்து கொண்டதென்று எவருமே அறிவர். நீங்கள் சகோதரரும், சகோதரியுமாய் அந்த காலத்தில் வாழ்ந்தீர்கள். நீங்கள் நவீன சபையையும் அதன் நாகரீகத்தைக் குறித்தும், பெண்கள் நடந்து கொண்ட விதத்தையும், அவர்கள் கைக்கொண்ட நாகரீகத்தைக் குறித்தும், மனிதர் தேவனுடைய வார்த்தையை விட்டு விலகிச் சென்றதைக் குறித்தும் பேசினீர்கள். தேவன் உங்களை அதனின்று வெளியே அழைத்தார். ஆனால், நீங்களோ தேவன் உங்களை எதிலிருந்து வெளியே அழைத்தாரோ, அதற்கே நேராக திரும்பச் சென்று விட்டீர்கள். நீங்கள் அப்படியிருக்க வேண்டுமென்று தேவன் உங்களை எழுப்பின் போதிலும், நீங்கள் ஏதோ ஒரு ஸ்தாபனத்தின் தூணில் கட்டப்பட்டு, சிம்சோனைப் போல் தோல்வியுள்ள

நிலையில், வார்த்தையைக் காணக்கூடாதவாறு உங்கள் கண்கள் பிடுங்கப்பட்டு, நின்று கொண்டிருக்கிறீர்கள். அது உண்மை. அது மிகவும் மோசமான செயல். அதை தோற்கடிக்க தேவன் உங்களை எழுப்பினார், நீங்களோ அதனுடன் சேர்ந்து கொண்டீர்கள்.



38. சிம்சோன், தேவன் அவனை எதிலிருந்து வெளியே இழுத்தாரோ, அங்கேயே சென்று ஒரு பெண்ணை மணந்து கொண்டான். பெந்தெகொஸ்தே சபையும், தேவன் அதை வெளியே இழுத்து அதற்கே திரும்பச் சென்று மணந்து கொண்டது. தேவன் குழுக்களுடன் ஈடுபட முடியாது. அவர் தனிப்பட்ட நபர்களுடன் மாத்திரமே ஈடுபடுகிறார், அது எக்காலத்தும் அவர் கொள்கையாய் அமைந்து வந்துள்ளது. இருவருக்கு இரு வெவ்வேறு கருத்துக்கள் இருக்க வகையுண்டு. தேவன் ஒரு மனிதனைத் தெரிந்து கொண்டு அவனை அவருடைய கருத்துக்குள் கொண்டு வருகிறார். அவ்வளவுதான். அவருக்குத் தேவையெல்லாம் ஒரு மனிதனே! இன்றைக்கும் அவர் அதையே முயன்று கொண்டிருக்கிறார். உன்னை அவர் தமது கரங்களில் கொள்ள முயன்று கொண்டிருக்கிறார். அவர் இங்கு ஒருவர்,

அங்கு ஒருவர் என்று தெரிந்து கொள்வார். அது ஒரு குழுவாக இராது. எனவே, அப்படிப்பட்ட எண்ணத்தை உங்கள் மனதை விட்டு எடுத்துப் போடுங்கள்.



39. நீங்கள் ஸ்தாபனம் உண்டாக்கிக்கொள்ளும் போது, அங்கேயே உங்கள் பிறப்புரிமையை இழந்துவிடுகிறீர்கள், நான் எந்த ஒரு மனிதனையும் ஒரு கேள்வி கேட்க

விரும்புகிறேன். தேவனுடைய செய்தியுடன் ஒரு மனிதன் எழுப்பப்படுகிறான். அவன் இவ்வுலகை விட்டு சென்றவுடனே அவர்கள் ஸ்தாபனம் உண்டாக்கிக் கொண்டனர், அவர்கள் ஸ்தாபனம் உண்டாக்கிக் கொண்ட மாத்திரத்தில் மரித்து போய் திரும்பி வரவேயில்லை. அப்படி திரும்பி வந்ததை யாராகிலும் கண்டதுண்டா? ஸ்தாபனம் உண்டாக்கிக் கொண்டவர்கள் திரும்பி வந்தார்கள் என்பதை ஆதரிக்க ஒரு வேத வாக்கியமோ சரித்திரமோ எதுவும் கிடையாது. அவ்வாறு ஸ்தாபனம் உண்டாகிக் கொண்டவர்கள் தங்கள் ஆவிக்குரிய வல்லமையை இழந்து, திரும்பி வந்ததேயில்லை. ஜீவனுள்ள தேவன் சிறிதளவும் கூட அவர்களில் காணப்படுவதில்லை. அவர்களுடைய ஆவிக்குரிய தட்பவெப்ப நிலை அளந்து காட்டு கருவியானது எப்பொழுதும் பூஜ்யத்துக்கு கீழே நாற்பது டிகிரியில்

உள்ளது. அப்படித்தான் அது உள்ளது. ''தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள், இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு.''





சங்கீதம் 126:5-6

**கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்.**



சங்கீதம் 126:5-6

# கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்.

அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்.





சங்கீதம் 126:5-6

**கண்ணீரோடே விதைக்கிறவர்கள்**
**கெம்பீரத்தோடே அறுப்பார்கள்.**



இன்று நமக்குத் தேவை என்னவென்றால், தங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிற நல்ல, பழைமை நாகரீகமான தாய்தகப்பன்மார்கள் தான் இன்னும் அதிகமாக நமக்குத் தேவை



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# சிம்சோன்

## சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

படங்களுடன்

2